1973 நவம்பர் 22]

ஒரு சட்டக் கல்லூரியை அமைத்தால் இந்தக் குறை நீங்கிவிடும். மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி பல தடவை ஆராய்ந்து, ஆராய்ந்து அது கைவிடப்பட்டுள்ளது. இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு தங்க விடுதி வசதி எதுவும் கிடையாது. அவர்கள் சேவாசதன் ஹாஸ்டலில் தங்குகிறார்கள். அப்படி வெளியே தங்கினால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று விடுதி ஒன்றைக் கட்டுவார்களா ? அல்லது சட்டக் கல்லூரி மாணவிகள் வெளியில் தங்கினாலும் அவர்களுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு என்று தனி விடுதி கட்டுகிற எண்ணம் இருக்கிறது. மாநிலக் கல்லூரி பெண்கள் விடுதியை ஒட்டியே இதைக் கட்ட இடத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சட்டக் கல்லூரி மாணவ விடுதியின் ஒரு பகுதியிலேயே சட்டக் கல்லூரி மாணவிகளும் தங்க அனுமதித்தால் என்ன என்று கேட்க விரும்புகின்றேன்.

(பதில் இல்லை.)

கலைக் கல்லூரிகள்

***300 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் கலைக்கல்லூரியை அரசு ஏற்று நடத்தவும், அதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் கலைக் கல்லூரி எனப் பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் நிபந்தனைகளை நிர்வாகத்தினர் நிறைவேற்ருததால் அக்கல்லூரியை அரசு ஏற்று நடத்த இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*** 301 வினு—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனி நகரத்தில் "அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டி, மற்ற நிபந்தனைகளும் நிறைவேற்றப் பட்டால், இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

*** 302 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் அரசினர் ஆண்கள் கல்லூரி ஒன்றினைத் துவக்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்திற்குப் பக்கத்தில் ஏ.வி.சி. என்ற தனியார் கல்லூரி இருக்கிறது. அரசாங்கம் அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் மானியம் தருகிறது என்ருலும் அந்தக் கல்லூரியில் எவ்வளவு அதிக மார்க்குகள் வாங்கியிருந்தாலும் கூட வன்னிய குலத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்ந்துக்கொள்ள மறுத்து வருகிருர்கள். அதுபற்றி, பல தடவை இந்த மன்றத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள வன்னியகுல மாணவர்களின் நலனைக் கருதியாவது தனியாகவே ஒரு அரசுக் கல்லூரியை அங்கே நிறுவ முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப்பிட்டபடி இப்போது அதற்கான உத்தேசம் இல்லை. மாயூரத்திலேயே ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கிருந்து பத்து மைலுக்குள்